Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 8-2-1985 வெள்ளிக்கிழமை (தை 26-ஜ அவ்17) முழக்கம் 4

## இளைஞர் மரணம்; பெண்கள் விடுதலை பிரஜைகள் குழுவுக்குப் பதில்

(கிளிநொச்சி)

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் கைதாகி வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட மூன்று இளைஞரும், வவுனியா முகாமிலிருந்து தப்பியோட எத்தனித்த போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமடைந்தது விட்டதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்பட்ட இத்தகவல் கிளிநொச்சி பிரஜைகள் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கைதான இளைஞர்கள் நிலைபற்றி பிரஜைகள் குழு விசாரித்த பின்னரே மேற்சண்டவாறு குழுத் தலைவர் வண. பயஸ் அடிகளுக்கு அறி 4ம்– பக்கம் பார்க்க

# அ.தி.மு.க. மந்திரிசபை ஞாயிறன்று பதவியேற்பு எம்.ஜி.ஆர். நான்கு வார்த்தை பேசினால்போதும்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப புதிய அமைச்சரவை ஞாயிற்றுக்கிழமை திரு எம். ஜி இராமச்சந்திரன் தலைமையில் பதவியேற்கும் என்று தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ் எல். குரானா நேற்றுத் தெரிவித்தார்

முன்னதாக திரு. எம். ஜி இராமச்சந்திரன் ஆளுநரைச் சந்தித்து நாற்பது நிமிடங்கள் வரை சம்பாஷித்தார். இதன்பின் நிருபர்களிடம் பேசிய ஆளுநர், ஞாயிறுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு ராஜ்பவனில் நடைபெறும் எளிய நிகழ்ச்சி ஒன்றில் பதவியேற்பு வைபவம் நடைபெறும் என்று சொன்னார். தன்னைச் சந்தித்ததையடுத்து அமைச்சரவை அமைப்பதற்கான அழைப்பைத் தான் அவருக்கு விடுத்ததாகவும் ஆளுநர் கூறினர்.

''பதவிப் பிரமாணத்தின் போது முதல்வர் நான்குவார்த்தைகளை மட்டுமே சொல்ல வேண்டியிருக்கும். ''எம் ஜி. இராமச்சந்திரனாகிய நான் மனப்பூர்வமாக உறுதி கூறுகிறேன்'' என்பதே அந்நான்கு வார்த்தைகளுமாகும். நான் ஆங்கிலத்தில் வாசிப்பதை ஒப்புதலளித்து அவர் தமிழில் கையெழுத்திட வேண்டும்'' என்றும் ஆளுநர் சொன்னார்

அனேகமாக ''சனிக்கிழமை அமைச்சரவைப் பட்டியலை சமர்ப்பிப்பதாக முதல்வர் கூறினர்'' என்று குறிப்பிட்ட ஆளுநர், ''அமைச்சரவை அமைப்புப் பற்றி மாநில விவகாரங்கள் குறித்தும் பொது

— 4ம் பக்கம் பார்க்க

# இன்று மாலை லலித் இந்தியா செல்கிறார் சத்வால் நேற்றே பயணமானார்

## சென்னையிலிருக்கும் கூட்டணித் தலைவர்கள் 14ம் திகதிக்குப்பின்னர் புதுடில்லி செல்வர்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விசேஷ தூதுவராக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இன்று மாலை புதுடில்லி பயணமாகிறார். இவரது விஜயத்துக்கு முன்னோடியாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. எஸ் ஜே. எஸ். சத்வால் நேற்று புதுடில்லி சென்றார்.

இம்மாதம் பன்னிரண்டாம் திகதிவரை புதுடில்லியில் தங்கியிருக்கும் அமைச்சர் அத்துலத்முதலி, பிரதமர் ரராஜீவ் காந்தி, பாரத வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி உட்பட இந்திய அரசின் முக்கிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் புதுடில்லி விஜயத்திற்கான ஒழுங்குகளையும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அங்கு மேற்கொள்ளலாமென்று கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சருடன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிராந்தியத்திற்கான டைரக்டர்திரு, தியானந்த ராஜபக்ஷவும் செல்கின்றார்,

—4–ம் பக்கம் பார்க்க

## சட்டத்தரணி கடத்தல் ?

இருபாலையிலுள்ள பிரபலமான சட்டத்தரணி ஒருவர் இனம் தெரியாதவர்களால் நேற்றிரவு கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

## மட்டுநகர் – கொழும்பு ரயில் சேவைகள் ரத்து!

(மட்டுநகர்)

மட்டுநகருக்கும் கொழும்புக்குமிடையிலான சகல ரயில் சேவைகளும் நேற்றுத் திடீரென ரத்துச் செய்யப்பட்டன மறு அறிவித்தல் வரை இச் சேவைகள் நடைபெறாதெனத் தெரியவந்துள்ளது. இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற சகல ரயில் பெட்டிகளும் பாதுகாப்புக் காரணமாக நேற்றுப் பொல்லனறுவ ரயில் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

## போன பணம மீண்டும் வந்தது

அண்மையில் இனந்தெரியாத இளைஞர்கள் சிலரால் யாழ் பல்கலைக் கழக உபதபால் நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பணம் மீண்டும் மேற்படி தபால் நிலைய அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து தபாலகம் நேற்று மீண்டும் வழமை போல இயங்கியது.

# யாழ் குடாவில் அரிசி, மா, சீனிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்!

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உடனடியாக அரிசி, மா கப்பல்கள் வராவிட்டால், இப்பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு உருவாகலாமென்று அஞ்சப்படுகின்றது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஆகிய இடங்களிலுள்ள உணவுத் திணைக்களக் களஞ்சியங்களில் அரிசியும் மாவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கு கையிருப்பில் இல்லை என்று தெரியவந்துள்ளது.

மீனவர்களின் உணவு முத்திரைக்கு வழங்குவதற்குத் தேவையான அரிசி, மா கூட சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமில்லையென ஒரு சங்கத்தின் தலைவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

சீனியும் கூட களஞ்சியங்களில் ஒரு குறிப்பிட்ட அளவே கையிருப்பிலிருப்பதாக தெரிய வந்துள்ளது. தற்போது கொழும்பிலிருக்கும் யாழ்.

—4–ம் பக்கம் பார்க்க

## பெற்றோல், டீசல் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் இப்போது பெற்றோல், டீசலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக இங்கு பெற்றோலியப் பொருட்கள் வராமையே காரணமாகும்.

## கூட்டணித் தலைவர் சிவா: சோர்வின்றி, அஞ்சாமல் தமிழர்கள் போராடுவார்கள்

(சென்னை)

அரசோடு நடத்தும் பயனற்ற பேச்சுவார்த்தைகளுக்காக தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட மாட்டோம். எமது கட்சியின் அடிப்படைக் கடமையான இதற்காக சோர்வில்லாமலும், அஞ்சாமலும் போராடுவோம் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் நேற்றுத் தெரிவித்தார்.

சென்னையில் விடுத்த அறிக்கையொன்றில் சிவசிதம்பரம் இன்றைய இலங்கையில் நிலவும் பயங்கர நிலைமைகள் தமிழ்

—4ம் பக்கம் பார்க்க

## சென்னையில் அமிர்: குடியேற்றத்தை எதிர்த்து இறுதி வரை போராட்டம்!

(சென்னை)

''ஆயுதம் தரித்த சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கத் தமிழர்கள் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்

''தமிழர்களை அச்சுறுத்தி விரட்டிவிட்டு ஆயுதம் தாங்கிய சிங்களவர்களை குடியேற்ற முயற்சி நடக்கிறது. இதன் பொருட்டு ஐம்பதாயிரம் தமி

—4ம் பக்கம் பார்க்க

## பொலிகண்டிச் சம்பவங்களால் பொதுமக்களுக்கு 35 லட்சம் ரூபா நஷ்டம் வல்வை பிரஜைகள் குழு அரசிடம் முறையீடு

(வல்வெட்டித்துறை)

ஜனவரி மாதம் முப்பதாம், முப்பத்தொராம் திகதிகளில் பொலிகண்டியில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களினால் மொத்தம் முப்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்றைம்பத்திரண்டு ரூபா நஷ்டம் உண்டாகியுள்ளதாக வல்வைப் பிரஜைகள் குழு சேகரித்த கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளதாக மேற்படி குழுவின் பிரதிநிதி ஒருவர் நேற்று 'ஈழ முரசு'க்குத் தெரிவித்தார்.

மேற்படிச் சம்பவங்களில் அறுபத்திரண்டு வீடுகள், ஐந்து கடைகள், ஒரு மில், இரண்டாயிரம் நூல்களுடன் ஓர் நூலகம், ஒரு ட்றோலர், நான்கு கட்டுமரங்கள், பத்து ஐஸ் வாடிகள் ஆகியனவும் கணக்கிட இயலாத வலைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நிவாரணம்

—4–ம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் 40 மீனவர் கைது

வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் வெளியான செய்திகளை நம்பி முல்லைத்தீவுக்கடலில் மீன்பிடிக்கச்

—4–ம் பக்கம் பார்க்க

★ பேராசிரியர் புல்ட்ஜென்ஸ் கருத்து:

# மூன்று துணை ஜனாதிபதிகளை நியமித்தல் நல்லது; ஒருவர் தமிழராயிருக்க வேண்டும்!

இலங்கையின் இனப்பிரச்சினை சம்மந்தமாகவும் இவ்விடயத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் எந்த அளவில் கவனம் செலுத்துகின்றன என்பது பற்றியும் இந்தியப் பேராசிரியர் ருல்ப் புல்ட் ஜன்ஸ் தெரிவித்த கருத்துக்கள் நேற்றைய ஈழமுரசில் வெளியிடப்பட்டது.

தமிழ்த்தீவிரவாத இளைஞர்கள் பிரச்சினைகள் சம்பந்தமாக பேராசிரியர் தெரிவித்த சில கருத்துக்களை இங்கு தருகின்றோம் :—

''இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு உபாயங்களைக் கையாள வேண்டும் குறுகிய கால உபாயம், நீண்டகால உபாயம் என இதனை இரண்டாகப் பிரிக்கலாம்.

குறுகியகால உபாயங்கள் பின்வருவனவாக அமையலாம்.

✳ சர்வகட்சி மகாநாட்டில் சிறுபான்மை இனத்தவர்களின் பிரேரணைகளை அமுலாக்குதல்.

✳ வடக்கிலும் கிழக்கிலும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

✳ அரச ஊழியர்களுக்கு இரு மொழிப் பயிற்சி வழங்குதல (நாங்கள் ஒரே தேசம் என்று கூறினால் முழுமையான இரு மொழி நிர்வாகம் உடையவர்களாக வேண்டும்).

✳ ஃபோறம் எனப்படும் ஒரு கருத்தரங்கினை உருவமைக்க வேண்டும். அங்கு பிரஜைகளின் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகள் குறைபாடுகளை எடுத்துரைத்து கலந்துரையாடி தீர்வுகாண ஆலோசனை பெறலாம்.

நீண்டகால உபாயங்கள் பின்வருமாறு அமையலாம் :—

✳ பலதரப்பட்ட சமுதாயங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட உப ஜனாதிபதிகளாக மூன்று அல்லது நான்கு பதவிகளை உருவாக்கலாம். (தற்போதைய அரசியல் ஒழுங்கு முறையை இது பாதிக்கமாட்டாது. பிரதமர் முதலாவது உப ஜனாதிபதி பதவியை வகிப்பார். அரசின் அதி உச்சமட்டத்தில் சிறுபான்மையினரை வைத்துக் கணிக்க இது உதவும்)

✳ விடயமறிந்தவர்கள் மத்தியில் பகிரங்க விவாதத்திற்கு ஊக்கமளிக்க வேண்டும். (இந்த மாதிரியான ஒரு பிரச்சினைக்கு பொதுமக்களின் உச்ச அளவிலான பங்களிப்புடன் தீர்வு காணவேண்டும். அரசியல் வாதிகளின் மடியில் இதனைத் தொப்பென்று போட்டுவிடக்கூடாது)

பௌத்த குடும்பத்தைச் சேர்ந்தவரான பேராசிரியர் புல்ட் ஜன்ஸ் இவ்விடத்தில் பௌத்த பிக்குமாரின் பங்கினையிட்டு வலியுறுத்திக் கூறினார். மகாசங்கத்தினருக்கு, அதாவது பிக்குமாருக்கு, இது விடயத்தில் நிச்சயமான பங்கு உண்டு. அவர்களுடன் எனது கலந்துரையாடலின் போது, அவர்களில் வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தமையை நான் கண்டுணர்ந்தேன். இதனை மேலும் ஆழமாக நோக்கியறிந்து, மகாசங்கத்தின் மனப்பான்மை யாது? அவர்களது ஒத்துழைப்பைப் பெற, நாம் செய்ய வேண்டியது யாது? என அறிதல் அவசியமாகும் பௌத்த சமயத்தவரான எவராவது சமாதானமான ஒரு தீர்வு காண்பதை எதிர்த்து நிற்கமாட்டார்.

மகாசங்கத்தின் அக்கறைகள் நியாயமானவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே எனவே இப்பிரச்சினையின் தீர்வில் பிக்குமாரின் பங்கு ஒரு அம்சமாக அமைய வழியமைக்கப்படுதல் வேண்டும். இல்லாவிட்டால், பயன் தரும் வகையில் தீர்வு காண்பது இயலாது எனவும் பேராசிரியா தெரிவித்தார்.

★ ஒரு புதுமையான பிரசாரம்

★ மூவரும் சத்தியப் பிரமாணம்

# வடிக்க, விற்க மாட்டோம்! குடிக்கவும் மாட்டோம்!

வடிசாராயக் குடியையும் விற்பனையையும் தயாரிப்பையும் தடுத்துநிறுத்துவதில் ஒரு புதிய முயற்சியினைத் திடற்புலம் சனசமூக நிலையத்தினர் மேற் கொண்டனர். வடிசாராயத்தை வடிப்பவர், விற்பவர், குடிப்பவர் என்ற மூன்று பிரிவினரையும் சனசமூக நிலையத்திற்கு வரவழைத்து அவர்களிடம் சத்தியப்பிரமாணம் வாங்கிக் கொண்டனர். இந்த உறுதிமொழிகளையும் அவற்றை நிறைவேற்றுவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பையும் குறிப்பிட்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்.

''வடிக்க, விற்க, குடிக்க மாட்டோம்'' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள இந்தப் பிரசுரத்தில ''பலகுடும்பங்களைத் துன்பத்துள் ஆழ்த்தி சமுதாயத்தைச் சீரழிக்கும் வடிசாராயத் தயாரிப்பில் ஈடுபடுவதில்லையென்ற உறுதியான முடிவை எடுத்துவிட்டோம்'' என வடிப்போரும், ''நீதிநியாய மிக்க வெறு தொழில்களை இனிச் செய்வதன்றி எக்காரணங் கொண்டும் இனி வடிசாராயத்தை விற்கமாட்டோம்'' என விற்போரும், ''எம்மையும் குடும்பத்தையும் வறுமையிலும் பட்டினியிலும் ஆழ்த்தும் வடிசாராயத்தை இனியும் குடிக்கமாட்டோம்'' எனக் குடித்தோரும் உறுதிமொழிச் சத்தியப்பிரமாணத்தைத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சத்தியப் பிரமாணமும் கருத்துக்களும் பிரசுரமாக வெளியிடப்பட்டதனால் அவை காப்பாற்றப்பட வழி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் திடற்புலம் சனசமூக நிலையத்தினரின் துணிச்சலும் சமயோசிதமும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளன.


## வரிவிளம்பரம்

### விற்கவும் வாங்கவும்

சகலவித பொருட்களும் விற்கவும் — வாங்கவும் தினமும் வாருங்கள்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

### கோழிக்குஞ்சு

B.iraha Farms புறொயிலர் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்

### சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ளலாம் நாடுங்கள் - கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம்.


# முல்லைத்தீவு அகதி முகாமில் 17 பேருக்கு வயிற்றோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அகதிகள் முகாமில் போதிய சுகாதார வசதிகள் இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் வயிற்றோட்டம் உட்பட சகல தொற்று நோய்களும் இப்போது கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பதாக அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் தெரிவித்தார்.

தற்போது வயிற்றோட்ட நோய்க்குட்பட்ட அகதிகள் பதினேழு பேர் மட்டும் தனியான ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வைத்திய வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

அதிகமான அகதிகளும் பகலில் வெளியிடங்களுக்குச் சென்று அசுத்தமான உணவு வகைகளை உட்கொள்வதாலும் கசிப்புப் போன்றவற்றை அருந்துவதாலுமே தொற்று நோய்கள் முகாமுக்குள் கொண்டு வரப்படுவதாகவும் முகாம் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மீண்டும் வேலை

'ரைம்ஸ்' பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டதால் வேலையிழந்துள்ள சுமார் எழுநூறு ஊழியர்களுக்கும் வேறு வேலை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டத்தை வகுக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இதற்கென தொழில் அமைச்சு, இராஜங்க அமைச்சு அதிகாரிகள் அங்கம் வகிக்கும் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து



✳ யாழ்- புங்கையபத பவளா பாலேந்திரா பரமேஸ்வரி தம்பதிகளின் மகன் திவாகர் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ். பருத்தித்துறை வீதி கமலநாதன் அம்பிகாமலர் தம்பதிகளின் மகள் ரேணுகா இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ கரணவாய் தெற்கு தர்மஸ்ரீ சரோஜா தம்பதிகளின் மகன் ருஜந்தன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ பூநகரி விஜசிக்தம்பி நகாபூஷணி தம்பதிகளின் மகள் திலகா இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ வேலணை மேற்கு பரராஜசிங்கம் தம்பதிகளின் மகன் சுரேஷ்வரன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ காரைநகர் கந்தையா சிவகலா தம்பதிகளின் மகன் விக்னேஸ்வரன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ அச்சுவேலிவடக்கு தயாநிதி தவராணி தம்பதிகளின் மகள் வீவிதா'' இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ்- சப்பல் வீதி தம்பித்துரை புஷ்பராணி தம்பதிகளின் மகள் இந்திராணி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## ஆண் குழந்தைகள் அதிகம் பிறப்பு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடந்த வருடம் ஜூன்மாதத்தில் கூடுதல் ஆண்குழந்தைகளும், அக்டோபர் மாதத்தில் கூடுதல் பெண் குழந்தைகளும் பிறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் 89 ஆண் குழந்தைகளும் 74 பெண்குழந்தைகளும், பெப்ரவரி மாதம் 85 ஆண் குழந்தைகளும் 79 பெண் குழந்தைகளும் மார்ச் மாதம் 71 ஆண்குழந்தைகளும் 85 பெண்குழந்தைகளும், ஏப்ரல் மாதம் 85 ஆண்குழந்தைகளும், 81 பெண் குழந்தைகளும் மே மாதம் 97 ஆண்குழந்தைகளும் 95 பெண் குழந்தைகளும், ஜூன் மாதம் 109 ஆண்குழந்தைகளும் 82 பெண்குழந்தைகளும், ஜூலை மாதம் 102 ஆண்குழந்தைகளும் 90 பெண்குழந்தைகளும், ஆகஸ்ட் மாதம் 100 ஆண் குழந்தைகளும் 98 பெண் குழந்தைகளும், செப்டெம்பர் மாதம் 100 ஆண்குழந்தைகளும், 87 பெண்குழந்தைகளும், அக்டோபர் மாதம் 96 ஆண் குழந்தைகளும் 114 பெண் குழந்தைகளும், நவம்பர் மாதம் 108 ஆண்குழந்தைகளும் 71 பெண்குழந்தைகளும், டிசெம்பர் மாதம் 79 ஆண் குழந்தைகளும் 72 பெண்குழந்தைகளும் பிறந்துள்ளனர்.

## காரைநகரில் அரிசிக்குத் தட்டுப்பாடு

(காரைநகர்)

காரைநகரில் அரிசிக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. கூட்டுறவுக் கடைகளில் அரிசி இல்லாதபடியால் தனியார் கடைகளில் ஒரு கிலோ அரிசி பன்னிரண்டு ரூபா முதல் பதின்நான்கு ரூபா வரை விற்பனையாகிறது.


விரைவில் வெளிவருகிறது!

கலை, இலக்கியம், விஞ்ஞானம் சோதிடம் முதலியவற்றில் ஆர்வமுள்ளவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும.

தமிழ் அன்புக்குரல்

தொடர்பு கொள்க: ''அன்புக்குரல்'' பத்திரிகை
248/4, கே. கே. எஸ்வீதி,
யாழ்ப்பாணம்.


## நிருபர்கள் தேவை

ஈழமுரசு காங்கேசன்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு பகுதி நிருபர்கள் இம்மாத இறுதியில் வெளிநாடு செல்வதால் மார்ச் முதலாம் திகதி முதல் இப்பகுதிகளில் நிருபர்களாகப் பணியாற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஊர்காவற்றுறை, மாதகல், அளவெட்டி வல்வெட்டித்துறை, பளை, பரந்தன், பூநகரி ஆகிய இடங்களுக்கும் உடனடியாக நிருபர்கள் தேவை.

அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களே விண்ணப்பிக்கலாம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்லறிவும் செய்தி சேகரிப்பதில் ஆர்வமும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். என்வலப்பின் இடபக்க மேல் மூலையில் ' நிருபர் பதவி ' என்று குறிப்பிடவும்.

சகல விண்ணப்பங்களும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 25-2-1985

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழமுரசு



உதய சிந்தனை

அறத்தை அழிக்கால் அது திருப்பி அழித்துவிடும் அறத்தைக் காப்பாற்றினால் அது திருப்பிக் காப்பாற்றும் - பஞ்சதந்திரம்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

8-2-85 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி தை 26)

## திரைக்கு முன்னால் மீண்டும் புல்ட்ஜன்ஸ்

கடந்த நவம்பர் மாதம் கொழும்பு 'மார்கா' நிறுவனத்தில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தி இலங்கை அரசியலில் பெரும் சலசலப்பை ஏற்படுத்திய பேராசிரியர் புல்ட்ஜன்ஸ், மீண்டும் இங்கு வந்து, பெரும் பரபரப்பை ஏற்படுத்திச் சென்றிருக்கின்றார்.

நேரு குடும்பத்துடன், அவர்களது அரசியல் நடவடிக்கைகளில் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பவர் பௌத்தரான பேராசிரியர்.

சுமார் மூன்று தசாப்தங்களாக இவருக்கும் இந்திய 'அரசியல் வாரிசுகளின்' பரம்பரைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதால் இவரது வாக்கைத் தேவவாக்காக எடுக்க வேண்டும்.

"இந்திரா இருக்கும் வரை இந்தியா இலங்கை மீது படை எடுக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் இப்போது அப்படி நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்று இந்திரா மறைவுக்குப் பின்னர் இங்கு வந்தபோது பகிரங்கமாகச் சொன்னவர் தான் இந்தப் பேராசிரியர்.

கடந்த வாரம் கொழும்பில் வைத்து அவர் தெரிவித்துச் சென்ற கருத்துக்கள் மேலும் மேலும் அவதானமாக பரிசிலனைக்கு எடுக்கப்படவேண்டியவை.

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி மிகவும் நுணுக்கமாக அவர் ஆராய்ந்திருக்கின்றார்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குறுகிய காலத்திட்டம், நீண்டகாலத்திட்டம் என்று இரு ஆலோசனைகளை அவர் முன் வைத்திருக்கின்றார்

இராணுவத் தீர்வினால் இலங்கைக்கு சர்வதேச அரங்கில் ஏற்படவிருக்கும் தாக்கங்கள் பற்றி அவர் எச்சரித்திருக்கிறார்

இலங்கையின் அபிவிருத்தி சர்வதேச நிதி உதவிகளில் முற்று முழுதாகத் தங்கியிருப்பதால், உள்நாட்டிலும், சர்வதேச மன்றிலும் நீண்டகாலத்துக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்பது பேராசிரியர் புல்ட்ஜன்சின் கருத்து.

பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்களைக் கொலை செய்வதால், பயங்கரவாதப் பிரச்சினையைத் தீர்த்து விடமுடியாது என்றும் துணிச்சலாகத் தனது கருத்தைக் கூறியுள்ளார். அதற்கான அணுகுமுறையை மூன்று மட்டத்தில் பரிசீலிக்க வேண்டும் என்பது அவரது ஆலோசனை.

எமது பிரச்சினையைப்பற்றியும், கஷ்டங்கள் பற்றியும் ஆலோசனை நடத்துவதற்காக உலகநாடுகளுக்கு எமது அமைச்சர்கள் பறந்து கொண்டிருக்கையில், எங்கள் அண்டை நாட்டின் ராஜதந்திரிகளில் ஒருவரான பேராசிரியர் இங்கு வந்து இலவசமாகவே ஆலோசனைகளை அள்ளி வழங்கிவிட்டுப் போயிருக்கிறார்.

'சும்மா வந்த யோசனை' தானே என்று பேராசிரியரின் ஆலோசனைகளை ஆட்சியாளர்கள் சும்மா தட்டிக்கழித்து விடக்கூடாது!

மிகவும் ஆழமாகச் சிந்தித்து, தனது கருத்துக்களை பேராசிரியர் இலங்கை மக்கள் முன்னால் வைத்துள்ளார். அவர் அத்துடன் நின்றுவிடவில்லை.

இலங்கை 'ஆயுத சப்பளை ஏஜன்டாக' விளங்கி, இஸ்ரேலையும் இறக்குமதி செய்து கொடுத்த அமெரிக்காவின் தற்போதைய மனப்போக்கையும் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

ரஷ்யாவின் நல்ல நண்பனாக விளங்கும் பாரதத்துடன் நட்புறவு கொள்ள றீகன் அரசு மேற்கொள்ளும் பகீரதப் பிரயத்தனங்களை பகிரங்கமாக பேராசிரியர் பறைசாற்றியுள்ளார்.

"பாரதத்தின் நட்பைப் பெறுவதற்காக இலங்கையை நட்டாற்றில் விடவும் அமெரிக்கா தயங்காது" என்ற புல்ட்ஜன்ஸின் கூற்றினை ஆட்சியாளர்கள் மந்திர வாக்காக எடுக்கவேண்டும்.

அமெரிக்காவின் அண்மைக்காலக் 'கைவிரிப்புகள்' புல்ட்ஜன்ஸின் கூற்றை உண்மையாக எண்ணத் தோன்றுகின்றன.

அவர் இறுதியாகக் குறிப்பிட்டது போல இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திறவுகோல் இந்தியாவிடம் தான் உள்ளது.

அதனைப் பெற்றுக்கொள்ள இப்போதுள்ள சந்தர்ப்பத்தை இலங்கை தவறவிடக்கூடாது என்பதே எமது விருப்பம்.

---

"எம். ஜி. ஆருக்கு சிகிச்சை அளித்த

# டாக்டர்களில் கடவுளை நான் காண்கிறேன்" -சிவாஜி உணர்ச்சி உரை

(சென்னை)

"தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் மீண்டும் நலம் பெற பாடுபட்ட டாக்டர்களில் நான் கடவுளைக் காண்கிறேன்" என்று பிரபல நடிகரும், ராஜ்யசபை உறுப்பினருமான திரு. சிவாஜி கணேசன் முதலமைச்சர் நலமடைந்து தமிழகம் மீண்டதையொட்டியும் அவருக்குச் சிகிச்சையளித்த டாக்டர்களை கௌரவித்தும் திரைப்பட கலைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் உரையாற்றுகையில் உணர்ச்சி ததும்பக் கூறினார் முதல்வருக்கு சிகிச்சையளித்த நியூயோர்க் புறூக்லின மருத்துவமனை டாக்டர் சிறீபாதராவ், நியூயோர்க்கிலுள்ள பாரத பௌண்டேஷன் தலைவர் திரு. பெரியசாமி ஆகியோருக்கு திரு. சிவாஜிகணேசன் பொன்னாடை போர்த்தி இவ்விழாவில் கௌரவித்தார்.

இக்கூட்டத்தில் நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் நியூயோர்க்கில் முதல்வருக்குச் சிகிச்சையளித்த டாக்டர்களில் ஒருவரான பிரெட்மன் அனுப்பிய கடிதம் ஒன்றினை வாசித்தார். முதல்வர் சுயமாக சிந்தித்து முடிவு எடுக்கக் கூடிய மிகவும் திருப்தியான நிலையில் இருப்பதாகவும் எதிர்பார்த்ததைவிட அவர் நன்றாக இருப்பதாகவும், நல்ல நினைவாற்றல் இருப்பதாகவும் இக்கடிதத்தில் பிரெட்மனால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக்கடிதத்தின் நகலைத் தான் ஆளுநரிடம் அளிக்கவிருப்பதாகவும் திரு நெடுஞ்செழியன் சொன்னார்

முதல்வர் சுகம்பெற சகல உதவிகளும் புரிந்த மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியை நினைவு கூர்ந்த அவர் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி முதல்வர் விடயத்தில் காட்டிய அளவிடற்கரிய ஆர்வம், அக்கறைக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முதல்வருக்கு ஒத்தாசை வழங்கிய பாரத வெளியுறவு



இலங்கை, வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அவரால் நன்றி கூறப்பட்டது.

டாக்டர்சிறீபாதராவ், திரு. பெரியசாமி, 'அப்பலோ' மருத்துவமனை டாக்டர்கள் நரேந்திரன், பாலசுப்பிரமணியம் முதலானோருக்கும் புறூக்லின் மருத்துவமனைக்குப் நன்றி தெரிவிக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

திரு பெரியசாமி தனது உரையில், "முதல்வர் நலமடைய மத்திய - மாநில அரசுகளின் உதவி மட்டுமல்ல, தமிழக மக்களின் பிரார்த்தனையும் உறுதுணையாயிருந்தது" என்றார். டாக்டர் சிறீபாதராவ் பேசுகையில், "முதல்வரது மிகுந்த தன்னம்பிக்கையும் எமக்குச் சிகிச்சையளிக்க ஊக்கம் தந்தது தமிழ்மக்கள் நடத்திய பல்வேறு வழிபாடுகள் என்னை நெகிழ வைத்தன. டாக்டர் பிரெட்மனுக்குத் தன் வலது கையாலேயே கடிதம் எழுதி இங்குவருமாறு அழைப்பு விடுக்க விருப்பதாகவும் தன்னால் மிக விரைவில் பேச முடியும் என்றும் என்னை முதல்வர் சந்தித்தபோது தெரிவித்தார்." என்று சொன்னார்.

இதேவேளை கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே சார்பில்கல்வியமைச்சர் ரகுபதி முதல்வரைச் சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்தது டன் ஹெக்டே கொடுத்த கடிதம் ஒன்றையும் கையளித்தார்.

---

## புகைத்தலில் ஜப்பானிய மாதர் அதிக ஆர்வம்

(டோக்கியோ)

மெய்மறந்து புகைபிடித்து சுகானுபவம் பெறுவதில் ஜப்பானிய அரிவையர் ஆடவரை முந்திவிட்டனர் என்று டோக்கியோவிலிருந்து வெளியான மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

மூன்று கோடியே முப்பது இலட்சம் மக்கள் இங்கு புகைபிடிக்கிறார்கள் என்றும் இதில் பெண்களே முன்னணி வகிக்கின்றார்கள் என்றும் இத்தகவல் கூறுகிறது.

---

ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு

## சோவியத்கம்யூ. கட்சி பத்து வாகனங்கள் அன்பளிப்பு

(மாஸ்கோ)

தென்னாபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போராடும் ஆபிரிக்கத்தேசிய காங்கிரஸுக்கு சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி பத்துமோட்டார் வாகனங்களை அன்பளிப்பாக வழங்கித் தனது ஆதரவினைக் காண்பித்துள்ளது.

ஆபிரிக்கத்தேசிய காங்கிரஸ் பகிரங்கமாகச் செயற்பட தென்னாபிரிக்காவில் தடையுள்ள போதிலும் அது பல்வேறு நாடுகளில் கிளைகளையும் ஸாம்பியத் தலைநகரான லுஸாக்காவில் தலைமையகத்தையும் கொண்டு செயற்படுகிறது.

---

## துருக்கியில் வருடந்தோறும் 15 ஆயிரம் தாய்மார் மடிவு

(லண்டன்)

துருக்கியில் ஆரோக்கியக் குறைவு அல்லது பயிற்சியற்ற தாதிமாரின் கவனக்குறைவால வருடந்தோறும பதினையாயிரம் தாய்மார் பிரசவத்தின் முன் அல்லது பிரசவத்தின் பின் இறப்பதாக சுகாதார இலாகா மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

நாற்பதாயிரம் கிராமங்களுக்கு பதினையாயிரம் பயிற்சி பெற்ற தாதிமார் மட்டுமே இங்கு உள்ளனராம்.

---

## இஸ்ரேலுடன் தொடர்ந்து பேச எகிப்து விரும்புகிறது

(கெய்ரோ)

இஸ்ரேலுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என்று எகிப்திய அதிபர் முபாரக் தெரிவித்துள்ளார். எனினும் சந்திப்புப்பற்றிய திகதியை அவர் குறிப்பிடவில்லை.

இது இவ்வாறு இருக்க, தென்லெபனான் சமாதானநிலை குறித்து ஐ. நா. சபையின் பாரதப்பிரநிதியும், பாதுகாப்புச் சபைத் தலைவருமான திரு. என். கிருஷ்ணன் பலகட்ட ஆலோசனைகளைத் தெரிவிக்கவுள்ளார். தென்லெபனானில் இருந்து இஸ்ரேலியத்துருப்புகள் வெளியேறவுள்ள இந்நிலையில் இவ்வாலோசனைகள் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## உச்சிமாநாடு

(பொன்)

இம்மாதம் இறுதியில் பிரான்ஸும், மேற்கு ஜெர்மனியும் உச்சிமாநாடு ஒன்றினை நடத்தவுள்ளன.

இதற்கு முன்னோடியாக பிரான்ஸ் பிரதமரும், மேற்கு ஜெர்மன் அதிபரும் பொன்னில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். பயங்கரவாதத் தடுப்பு விடயத்தில் பரஸ்பர ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விடயங்களை இவர்கள் ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

---

## தயார்

(மனகுவா)

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயாராக இருப்பதாக நிக்குராகுவா நேற்றுத் தெரிவித்தது.

---

## முடிவு

(சிட்னி)

அமெரிக்கா ஏவுகணைப் பரிசோதனை நடத்துவதற்கு வசதியளிப்பதில்லை என்று அவுஸ்திரேலியா முடிவு செய்துள்ளது.

## ராணுவத்திற்கு பெப்பே

(மணிலா)

பிலிப்பைன்ஸில் பிரபல உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டல் ஒன்றினை தீயிட்ட குற்றச்சாட்டின் பேரில் இராணுவ முகாம் சிறையில் வைக்கப்பட்டிருந்த பலமோ என்ற நபர் தப்பியோடி விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

## மந்திரிகள் ஆலோசனை

(லண்டன்)

ஆசியான் நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் இன்று முதல் ஒன்பதாம் திகதிவரை கூடி பொருளாதார கைத்தொழில் வர்த்தக ஒத்துழைப்புக்கள் குறித்து ஆராயவுள்ளனர்.

ஈழமுரசு

## முழங்காவில் அரசாங்க விடுதி குண்டு வைத்துத் தகர்ப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முழங்காவிலில் அமைந்திருந்த அரசாங்க சுற்றுலா விடுதி நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது கட்டடம் முழுமையாகச் சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடுதியைக் குறிப்பிட்ட சிலர் தமது பாவனைக்காக இடைக்கிடையே பயன்படுத்தி வந்தமையே இதற்குக் காரணமென்று கூறப்படுகின்றது. அதே வேளையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கண்மையில் நேற்று முன்தினமிரவு வாஹனொன்றினை நோக்கி பல தடவை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

### யாழ்ப்பாண மாவட்டத்திற்கு

# இவ்வாரம் முதல் இடமாற்றம்பெற்ற 129 பட்டதாரி ஆசிரியர்கள் விபரம்

வெளி மாவட்டங்களில் கடமையாற்றிய 129 பட்டதாரி ஆசிரியர்களுக்கு இவ்வாரத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

1983 செப்டம்பரில் வழங்கப்படவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்ட ஆசிரியர்களே இவர்களாவர்.

இவ்வாசிரியர்களின் பெயர்களும், அவர்கள் கடைசியாகப் பணியாற்றிய இடங்களும் கீழே தரப்படுகின்றது.

எஸ் கந்தவனநாதன் (கந்தப்பொல) எஸ். சிவஞானசுந்தரம் (தலவாக்கொல்லை) செல்வி ஆர் செல்வவிநாயகம் (தலவாக்கொல்லை) எஸ். சுப்பிரமணியம் (மஸ்கெலியா) செல்வி எஸ். செல்லத்துரை (நுவரெலியா) என் நவரட்ணராஜா (ஹட்டன்) என சத்தியநாதன் (ஹட்டன்) என் குட்டித்தம்பி (தலவாக்கொல்லை) செல்வி என். மகேந்திரன் (பூண்டுலோயா) என். குலேந்திரராஜா (அக்கரபத்தனை) திருமதி ஆர். விநாயகலிங்கம் (நுவரெலியா) கே. மயில்வாகனம் (நுவரெலியா) எஸ் நவரட்ணம் (ஹட்டன்) எம்.பால சுப்பிரமணியம் (ஹட்டன்) திருமதி கே. சூடாமணி (ஹட்டன்) வி ஜெயரட்ணம் (நுவரெலியா) கே. செல்வபிரகாசம் (தலவாக்கொல்லை) எம. கருணாநிதி (நுவரெலியா) ரி. நவரட்ணம (பொகவந்தலாவ) எஸ். தேவராஜா (பொகவந்தலாவ) எஸ் எம் மூர்த்தி (தெல்தெனிய) செல்வி பி. நாகலிங்கம (கண்டி) திருமதி கே குமாரலிங்கம (பன்வில) கே. நவரட்ணம் (கண்டி) பி.முத்துலிங்கம் (மகியாவ) திருமதி எஸ் தர்மலிங்கம் (எட்டியாந்தோட்ட) திருமதி எஸ் பத்மஜபஐயர் (மாத்தளை) செல்வி எஸ். கோபாலபிள்ளை (திருகோணமலை) செல்வி பி. ராமலிங்கம் (திருகோணமலை) திருமதி வை புண்ணியமூர்த்தி (மூதூர்) செல்வி. க முத்துக்குமார (திருகோணமலை) ஆர். விஜயரட்ணம் (சீனன்குடா) செல்வி எஸ். நாகராஜா (திருகோணமலை) செல்வி சி சிவஞானம் (திருகோணமலை) திருமதி கே திருஞானசம்பந்தர் (திருகோணமலை) வீ இராசையா (திருகோணமலை) ஏ. பொன்னையா (திருகோணமலை) ரீ நாகேந்திரராஜா (மூதூர்) திருமதிஆர் குலவீரசிங்கம (திருகோணமலை) செல்வி எஸ். கதிரிப்பிள்ளை (திருகோணமலை) திருமதி பீ. கார்காமநாதன் (திருகோணமலை) செல்வி எஸ். பொன்னுத்துரை (திருகோணமலை) ரீ. முத்துக்குமாரசாமி (திருகோணமலை) திருமதி கே. செல்வரட்ணம் (திருகோணமலை) ரீ ஜெயவீரசிங்கம் (திருகோணமலை) திருமதி எஸ். அழகதுரை (திருகோணமலை) பீ. பாலசுப்பிரமணியம் (கல்பிட்டிய) செல்வி எஸ் சுப்பிரமணியம் (காத்தான்குடி) ஐ கே. லிங்கோற்பவநாதன் (சித்தாண்டி) திருமதி பீ மகாலிங்கம் (மட்டக்களப்பு) செல்வி ஐ.பரிமளா (மட்டக்களப்பு) செல்வி வீ அகஸ்ரீன் (ஏறாவூர்) செல்வி எம் நாராயணி (வாழைச்சேனை) திருமதி பீ சதானந்தசிவம் (வாழைச்சேனை) செல்வி கே மனுவேற்பிள்ளை (வாழைச்சேனை) எஸ். தம்பிஐயா (பொலநறுவ) திருமதி பீ. சிவஞானம் (வாரிக்குட்டியூர்) செல்வி எஸ். சுப்பிரமணியம் (வவுனியா) ஏ. சின்னத்தம்பி (வவுனியா) திருமதி ரீ ரீபஸ்ரியன் (வவுனியா) செல்வி என் இரத்தினசபாபதி (வவுனியா) கே. சிவசுப்பிரமணியம் (வவுனியா) திருமதி ஜி செல்வநாயகம் (வவுனியா) செல்வி எம் கந்தையா (வவுனியா) எம் எஸ் அப்துல் றஹீம் (வவுனியா) திருமதி ஆர் இருதயநாதன் (மன்னார்) செல்வி பி. செல்வரட்ணம் (மன்னார்) திருமதி கே. கணேசமூர்த்தி (மன்னார்) செல்வி ரீ. சின்னத்துரை (முருங்கன்) செல்வி கே சின்னத்தம்பி (மன்னார்) செல்வி எஸ். முத்துசாமி (அடம்பன்) செல்வி பீ. ஞானசம்பந்தர் (மன்னார்) திருமதி. ஆர். சந்தசாமி (மன்னார்) செல்வி ஜே வி எட்வட் (மன்னார்) செல்வி எம. எல். தோமஸ் (பேசாலை) செல்வி, எம் ரட்ணசிங்கம் (மன்னார்) எஸ். சரவணமுத்து (மன்னார்) திருமதி எஸ் சேதிருபன் (பள்ளிமுனை) செல்வி. டி. யோகப்பர் (முருங்கன்) செல்வி கே கந்தையா (மன்னார்) செல்வி பி சின்னத்தம்பி (மன்னார்) திருமதி கே. பிரான்சிஸ் (மன்னார்) செல்வி. வி கனகம்மா (மன்னார்) செல்வி. பி தர்மபூபதி (மன்னார்) செல்வி எம.ஏ காதகி (மன்னார்) செல்வி என். கணபதிப்பிள்ளை (மன்னார்) செல்வி கே. பராசக்தி (அடம்பன்) செல்வி பி. கந்தசாமி (எருக்கலம்பிட்டி) கே. நடேசு (கல்முனை) எஸ் தங்கராஜா (அக்கரைப்பற்று) திருமதி வி. சிவநாதன் (கல்முனை) ரி, பொன்னுத்துரை (கல்முனை) ரி. கிருஷ்ணகுமார் (நிந்தவூர்) கே. தனராஜா (நிந்தவூர்) எஸ் குணரட்ணம் (நிந்தவூர்) திருமதி, வி. பத்மநாதன (தும்மோதர) ஆர். ரி ராசையா (அவிசாவளை) எஸ். சீவரத்தினம் (முல்லைத்தீவு) திருமதி. ஜெ. பேரானந்தன் (வவனிக்குளம) திருமதி. எஸ். சண்முகராசா (வவனிக்குளம) செல்வி பீ. வடிவேல் (முல்லைத்தீவு) செல்வி பொன்னுத்துரை (அலம்பில்) எம். ஸ்ரீபதி (கலேவெல) ஆர் கணபதிப்பிள்ளை (ஹட்டகஸ்திகிலிய) பி. சோமஸ்கந்தசிவம் (எத்துன்கஹகொட்டுவ) திருமதி. ப. தனபாலசிங்கம் (கொட்டம்பிட்டிய) எஸ். கனகலிங்கம் (மாகோ) செல்வி ஆர் சங்கரப்பிள்ளை (குருணாகல) திருமதி. ஆர். சத்தியநாசன் (குருணாகல) எம் அம்பலவாணர் (வெலிமடை) ரி நடராஜா (வவுனியா) என் சிவகுரு (நுவரெலியா) ரீ. ஜெயசீலன் (கொழும்பு) திருமதி. ஜெ. செல்வலோகநாதன் (அம்பாறை) எஸ், என் தமிழ்மோகன் (மன்னார்) கே. சிதம்பரநாதன் (நுவரெலியா) எஸ், கே. செல்வரட்டிணம் (பண்டாரவளை) திருமதி எம். இராசரெட்ணம் (வவுனியா) திருமதி ஜீ வை. பிரேமராஜா (வவுனியா) வீ. மதுபாலசிங்கம் (முல்லைத்தீவு) திருமதி. எஸ் ரட்ணராஜா (திருமலை) திருமதி. ரீ. சாம்பசிவம் (திருமலை) திருமதி எஸ் இராஜகோபால் (கல்முனை) எம் விஸ்வேஸ்வரர் (கல்முனை) செல்வி கே வீரசிங்கம் (மன்னார்)ரீ தவேந்திராஜா (கம்பொல) ரீ பரமேஸ்வரன் (கண்டி) கே. விமராஜன் (நீர்கொழும்பு)

## அ.தி.மு.க...

—1ஆம் பக்கத் தொடர்

வாக நாம் விவாதித்தோம். சரளமான நிலை பேச்சில் அவரிடம் காணப்படவில்லை ஆனால் அது பதவியேறபதற்குத் தடையாகாது சொல்வதைபபுரிந்து கொள்ளும் நிலையிலிருந்தாலே போதுமானது இது பற்றி நான் அரசியல் நிபுணர்களுடன் கலந்தாலோசித்தேன். அவரது மனநிலை சீராக இருக்கிறது. அவருக்குச் சிகிச்சையளித்து வரும் டாக்டர்களின் அறிக்கையையும் அப்பலோ மருத்துவமனை பிரதம டாக்டர் பிரதாப் ரெட்டியினது அறிக்கையையும் கோரியுள்ளேன். முதல்வரது உடல் நிலை வியத்தகு அளவில் தேறி வருகிறது'' என்றும் ஆளுநர் சொன்னார்.

## முல்லைத்தீவில்...

—1-ம் பக்கத் தொடர்

சென்ற சுமார் 40 மீனவர்கள் நேற்று படையினரால் கைது செய்யப்பட்டனர், இவர்கள் பிடித்த மீன் ருல் உட்பட வலைகள், வள்ளங்களும் எடுத்துச்செல்லப்பட்டன இச்செய்தி அச்சுக்குப் போகும் பேசது, சிலர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது,

## பயங்கரவாதம் பற்றி ஜனாதிபதி

1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியைப் போலல்லாது வடபகுதியில் இப்பொழுது ஏற்பட்டுள்ள பயங்கரவாதம், கெரில்லாத்தாக்குதல்களாக இருப்பதனால் அதனை முடித்துக்கட்டுவது அரசுக்கு இலகுவானதாக இருக்காது என்று ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன நேற்று மகாபொல நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

## பொதுமக்களுக்கு...

—1ம் பக்கத் தொடர்

குறித்துப் பிரஜைகள் குழு அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. வேலுப்பிள்ளையைச் சந்தித்து ஆலோசனை நடத்தியபின் யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்புச் செயலாளர் திரு எஸ். பி. பாலசிங்கத்தைச் சந்தித்து நிலவரங்களை சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தது.

நாளை அல்லது திங்கட்கிழமை இவர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில் மேலதிக உணவு முத்திரைகளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக உணவுகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென இச் சந்திப்பின் போது தெரிவிக்கபபட்டதாம்

## குடியேற்றத்தை ..

—1ம் பக்கத் தொடர்

மூாகள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இக்குடியேற்றங்களைத் தடுக்கத் தமிழர்கள் போராடித் தீர்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்று அவர் சொன்னார்.

''தமிழ் மக்கள் ஒன்றிணைந்து இதனை எதிர்த்து இறுதிவரை போராடுவார்கள்'' என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார்.

## இன்று மாலை...

—1-ம் பக்கத் தொடர்

தற்போது சென்னையில் தங்கியிருக்கும் கூட்டணித் தலைவர்களான மு. சிவசிதம்பரம் அ அமிர்தலிங்கம், இரா சம்பந்தன் ஆகியோர் இம் மாதம் 14ம் திகதிக்குப் பின்னர் புதுடில்லி செல்லலாமென்று சென்னையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன,

## சோர்வின்றி...

—1-ஆம் பக்கத் தொடர்

ஈழத்தை அடைய வேண்டும் என்ற எமது எண்ணத்தை மேலும் வலுப்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்,

இனப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஒரு மாற்று நடவடிக்கையாகவும், இப்போதைய ஆகக் குறைந்த பட்சக் கோரிக்கையாகவுமே வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சபையைத் தமது கட்சி கேட்பதாகவும் அவர் சொன்னார்.

## கலைப்பீடத் தேர்வு 22ல் ஆரம்பம்

ஏற்கனவே பிற்போடப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டுக் கலைப்பீடத் தேர்வுகள் இம் மாதம் 22ம் திகதி ஆரம்பமாகுமென பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

## அகதிகளுக்கு உதவி

உயர் நிலை மாணவர் ஒன்றியத்தின் சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கான ஒன்றியம் முல்லைத்தீவு அகதிகள் நிவாரணத்திற்காக யாழ்ப்பாணப் பகுதியில் நிதியும் பொருளும் சேகரித்து வருகின்றனர்.

## இளைஞர் மரணம்...

—1ம் பக்கத் தொடர்

விக்கப்பட்டது. அதே வேளையில் இங்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட ஐந்து பெண்களும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக இப்போது பிரஜைகள் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம,

## யாழ் குடாவில்...

—1-ம் பக்கத் தொடர்

அரசாங்க அதிபர் நேற்று உணவு ஆணையாளரைச் சந்தித்து இது பற்றிப் பேசியதாகத் தெரிய வந்துள்ளது. அரிசி மா ஏற்றிவரும் கப்பலொன்று நாளை வரலாமென்று அரசாங்க செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

## 1 வது ஆண்டு நினைவஞ்சலி

### ஆ. கிருஷ்ணன்

மலர்வு

12 × 03 × 1953



உதிர்வு

22 × 01 × 1984

மீளாத்துயில் கொண்ட பாசத் திரு விளக்கே உங்கள் ஆத்மா சாந்தியடைய முதலாவது நினைவஞ்சலியாகிய இன்று இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் செலுத்தி அஞ்சலி செய்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
ஆ. வன்னியசிங்கம்
ம. இலட்சுமி
ஆ வள்ளி
மற்றும் குடும்பத்தினர்

திருவள்ளுவர் சனசமூக நிலையம்
மத்தொனி
சரவெட்டி

ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அமசாசியேட்ஸ் ஸ்தாபனத்தாரால, 37,கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 8-2-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.